செ.வெ.எண். 61/பிப்ரவரி                                    தேதி : 23.02.2017

**<u>தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஏரி, குளம், குட்டை அரசு புறம்போக்கு மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலங்களில் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை முற்றிலுமாக அகற்றுவது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.</u>**




தருமபுரி மாவட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் ஏரி, குளம், குட்டை அரசு புறம்போக்கு மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலங்களில் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை முற்றிலுமாக அகற்றுவது குறித்த கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.02.2017) நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு தருமபுரி மாவட்டம் முழுவதும் உள்ள ஏரி, குளம், குட்டை அரசு புறம்போக்கு மற்றும் தனியாருக்கு சொந்தமான நிலங்களில் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரங்களை முற்றிலுமாக இம்மாத இறுதிக்குள் அகற்ற மாண்புமிகு சென்னை உயர்நிதி மன்றம் மதுரைக்கிளை கடந்த 10.2.2017 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நமது மாவட்டம் முழுவதும் பொதுப்பணித்துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 586 குளங்கள் உள்ளன. அதற்கு வனத்துறை மூலம் சீமைக்கருவேல மரங்களை அகற்ற மதிப்பீடு 66 ஏரிகளுக்கு பெறப்பட்டு ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பொதுப்பணித்துறை மூலம் ஏலம் விடப்பட்டு போர்க்கால அடிப்படையில் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. மீதம் உள்ள ஏரிகளிலும் சீமைக்கருவேல மரங்கள் அனைத்தும் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தனியார் நிலங்களில் வளர்ந்துள்ள சீமை கருவேல மரங்களை அகற்ற மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளை உத்தரவின்படி ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நோட்டிஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளை விரைவாக முடிக்க ஆட்கள் மட்டுமல்லாமல் ஜேசிபி இயந்திரங்களும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டம் முழுவதும் சீமைக் கருவேல மரங்கள் 15 தினங்களுக்குள் அகற்றும் பணியை முடிக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி. விமலாதேவி, மகளிர் திட்ட அலுவலர் திரு. கல்யாணசுந்தரம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.